கூலிம் நகரத்தார்

ஸ்ரீ தண்டாயுதபாணி கோயில்

திருக்குட் நன்னீராட்டு விழா

வெகுதான்ய ஆண்டு தை 8

மலர்

22-1-1999

மங்கல நீராட்டு விழா

நினைவில் வாழும் சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார்

"கும்பாபிஷேகம்" என்பது வட சொல், இதனைக் "குடமுழுக்கு" என தமிழில் வழங்கும் ஆட்சி அண்மைக் காலத்தில் ஏற்பட்டது. சேரன் செங்குட்டுவன் இமயமலையிலிருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்குச் சிலை வடித்தான், வடித்த சிலையைக் கோயிலில் பிரதிட்டை செய்து மிகப் பெரிய அளவில் கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தான். அக்கும்பாபிஷேகத்தை மங்கல நீராட்டு விழா என இளங்கோ அடிகள் குறிப்பிடுகிறார். இதிலிருந்து பழங்காலத்தில் கும்பாபிஷேகத்தை மங்கல நீராட்டு விழா எனத் தமிழகத்தில் வழங்கி வந்தனர் என்பது புலனாகிறது.

கடவுள் எங்கும் நிறைந்தவர். அவரை அருவமாக வழிபடுதலே சிறப்பு என நம்மில் சிலர் கருதுகின்றனர். காற்று எங்கும் நிறைந்ததுதான், அஃது அருவமாகவே இருக்கிறது. அப்படியானால் அது கடவுள் ஆகுமா? காற்றுக்கு அழிவில்லை, படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய தொழில்களை அதனால் செய்ய இயலாது. இதனால் காற்று கடவுளாக முடியாது என்பது தெளிவு. எங்கும் நிறைதிருப்பதும் அருவமாக இருப்பதும் கடவுளுக்குச் சிற்பிலக்கணமாக இருக்குமானால் காற்றையே கடவுள் என்று சொல்லிவிடலாம். முற்றறிவும் எல்லாம் வல்லமையும் எல்லையில் கருணை உடைமையுமே கடவுளுக்குச் சிற்பிலக்கணமாகும். இச்சிறப்பிலக்கணத்தை யாரும் மறுக்க இயலாது. அங்ஙனமானால் அவர் அருவமாகவே இருப்பார் என வரையரை செய்வது எங்ஙனம் பொருந்தும்? எல்லா வல்லமையும் முற்றறிவும் உடைய அவர் நினைந்த ஒரு திருமேனியைத் தன் சக்தியால் கொள்ளுவார் என்று சொன்னால் தானே அவரின் முற்றறிவுக்கும் எல்லா வல்லமைக்கும் எல்லையில் கருணை உடைமைக்கும் பொருத்தமாக இருக்கும் உருவமாக அவர் வரமாட்டார் என்றோ, வரமுடியாது என்றோ சொன்னால் அஃது அவர்க்கென்றே சொல்லப்படும் வல்லமைக்கும் கருணைக்கும் இழுக்காக முடியும் அன்றோ? இதனைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனவே நம் சமயம் உருவத் திருமேனியை ஒப்புக்கொள்கிறது.

அருவம் உருவத்தினும் பார்க்கச் சிறப்புடையதன்று. அருவப் பொருட்களில் பல அறிவற்ற சடமாக இருத்தல் கண்கூடு. மேலும் அருவம் உருவம்போல் எல்லைக்குட்பட்டதே ஆகும். காற்று அருவமாக இருந்தும் அஃது உடலில் படும்போது மனம் உணர்கிறது. மனம் குறிப்பிட்ட அளவுக்குமேல் எதனையும் கிரகிக்கும் ஆற்றல் அற்றது. இதனால்தான் கடவுளை மனம், வாக்கு இரண்டிற்கும் எட்டாதவன் என்று சொல்கிறோம். காற்று மனத்திற்குப் புலனாவதால் அருவமும் எல்லையுடையதே என்பது தெளிவு. கடவுள் உண்மையில் அருவமும் கடந்தவராவார். அவரின் சொரூபநிலை அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்றையும் கடந்தது. அந்நிலை சொல்லால் கூறவொண்ணாதது. நாம் அவனருளைப் பெறாமல் அந்த நிலையை உணரவராது. அந்த அருளை நாம் பெறுவதற்காகவே காணவும் கருதவும் முடியாத அவர்தம் எல்லையில் கருணை காரணமாக அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று திருமேனிகளிலும் தோன்றி நம் வழிபாட்டை ஏற்றுக்கொள்கிறார். இதனால் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்றும் அருள்தருவதில் ஒரு நிகரனவே என்பது பெறப்படும். எந்தத் திருமேனியில் வழிபாடு செய்தாலும் பயனில் ஏற்றத்தாழ்வு இருப்பதற்கில்லை.

நம் திருக்கோயில்கள் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூவகை

திருமேனிகளையும் உணர்த்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. கோயிலெங்கும் கடவுள் வியாபித்திருக்கிறார் என்னும் உணர்வு அவரின் அருவத்திருமேனியையும் சிவலிங்கம் அவரின் அருவுருவத் திருமேனியையும் பிள்ளையார், முருகன், நடராசர், அம்பாள், தட்சணாமூர்த்தி முதலிய மூர்த்தங்கள் அவரின் உருவத் திருமேனியையும் உணர்த்துகின்றன.

இறைவனின் உருவத் திருமேனியைப் பெரியார்கள் பலர் நேரில் கண்டுள்ளனர். ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர், முதலிய நம் குரவர்கள் இத்திருமேனிகளைத் தாம் கண்டதாகத் தம் பாடல்களில் அருளிச்செய்துள்ளனர். அவை அகச்சான்றாக நின்று நமக்கு உண்மையை உணர்த்துகின்றன. "கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்" என்பது அப்பர் வாக்கு.

பெரியார்கள் கண்ட திருவுருவங்கள் பல: இறைவனுக்கென்று தனி உருவம் இல்லை. அவன் அன்பர்கள் விருப்பிற்கேற்ற திருமேனிகளில் தோன்றிக் காட்சி அளித்திருக்கின்றான். இறைவன் ஒருவனாயிருந்தும் அவன் கொண்ட மூர்த்தங்கள் பல ஆகியமைக்குக் காரணம் இஃதே ஆகும். அதி தெய்வங்களும் சிறு தெய்வங்களும் பல உண்டு. உதாரணமாக நவக்கிரகங்கள் அதிதெய்வங்களாகும். மாடன், காடன், மதுரைவீரன் முதலியவை சிறு தெய்வங்களாகும். இவை முழுமுதற் பொருளின் மூர்த்தங்கள் அல்ல. பிள்ளையார், முருகன், சிவலிங்கம், நடராசர், அம்பாள் முதலிய மூர்த்தங்களே முழுமுதற் பொருள் மூர்த்தங்களாகும். இவை ஒரே இறைவனின் வெவ்வேறு வடிவங்களாதலால் இவற்றுள் எந்த ஒன்றையும் நாம் இஷ்ட மூர்த்தமாகக் கொண்டு வழிபடலாம். பயன் ஒன்றே ஆகும். இவற்றுள் ஏற்றத்தாழ்வு இல்லை.

ஆகமங்களிலும் பெரியோர்கள் வாக்குக்களிலும் இறைவனின் உருவத் திருமேனிகள் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. அடியவர்கள் தாம் நேரில் தரிசித்த வடிவங்களில் தன்மையைத் தெளிவுற விவரித்திருப்பதால் அவ்வாக்குக்களை ஆதாரமாக வைத்தே கற்களிலும் உலோகங்களிலும் அவை வடிக்கப்பட்டுள்ளன. கற்பனையாக மனிதன் இவ்வுருவங்களை அமைத்தான் என நம்மில் சிலர் கூறுவதுண்டு. இது தவறாகும். இறைவனே காட்டக் கண்ட வடிவங்களாக இவை இருக்கின்றன என்பதற்குத் திருமுறைகள் சான்று பகர்கின்றன. தத்துவ உண்மையை உணர்த்துவதற்காக இவை அமைக்கப்பட்டன என்றும் சிலர் சொல்வதுண்டு. கடவுள் காட்டிய வடிவங்களிலிருந்து தத்துவ உண்மைகள் புலனாகின்றனவே அல்லாமல் தத்துவங்களிலிருந்து கடவுள் வடிவங்கள் புலனாகவில்லை ஏன அறிதல் வேண்டும்.

உருவத் திருமேனிகள் பிரதிட்டை செய்யப்பெற்றிருக்கும் இடமே திருக்கோயிலாகும். திருக்கோயில்கள் இல்லாவிட்டால் இத் திருமேனிகளை நாம் தெரிந்துகொள்ள இடமில்லை. இதனால் கோயில்கள் எவ்வளவு அவசியம் என்பது இனிது விளங்கும்.

திருக்கோயில்களைப் புதிதாகக் கட்டினாலும் புதுப்பித்தாலும் கும்பாபிஷேகம் எனப்படும் மங்கல நீராட்டு விழாச் செய்யவேண்டுவது அவசியமாகும். கல்லிலோ, செம்பிலோ உருவத்தை வடிக்கிறோம். அவை கல் அல்லது செம்பு என்னும் நினைவு நம்மைவிட்டு அறவே நீங்கிப் பார்த்த மாத்திரத்திலேயே அவை இறைவனின் மூர்த்தங்கள் என்னும் நினைவு தோன்றவேண்டும். இதற்காகவே கும்பாபிஷேகக் கிரியைகள் செய்யப்படுகின்றன.

உலகம் பஞ்சபூதத்தாலானது: வான், காற்று, நெருப்பு, நீர், மண் என அவை கூறப்பெறும். இறைவன் வான் பூதத்தில் சூக்குமமாக வியாபித்திருக்கிறான். அவனை மெல்ல மெல்ல இறக்கு ஒவ்வொரு பூதத்திலும் முனைக்கச்செய்வதே கும்பாபிஷேக கிரியைத் தத்துவமாகும். இறைவன் எல்லாவற்றிலும் நிறைந்தே நிற்கிறான். ஆனால் மந்திரம் ஜபிக்கப்படும்போது, ஜபித்த இடத்தில் முனைத்து நிற்பது அவன் இயல்பு.

யாகசாலையில் குடங்களில் நீரை நிரப்பித் தேங்காய்களை அவற்றின் வாயில்களில் வைத்துப் பூஜையை துவக்குகிறோம். குடம் ஓர் உடல்போல் உருவகிக்கப்படுகிறது. குடத்தைச் சுற்றியுள்ள நூற்கள் நரம்புகளைக் குறிக்கும். தேங்காய் தலையையும் உள்ளே இருக்கும் நீர் இரத்தத்தையும் குறிக்கும். இவ்வாறு குடங்களைப் பாவித்து வைத்து, அருகே அக்கினக்குண்டம் அமைத்து நெய் ஊற்றி நெருப்பை வளர்க்கிறோம். சிவாச்சாரியார்கள் சுற்றி வர இருந்து மந்திர ஒலியை இடைவிடாது எழுப்புகின்றனர். சூக்குமமாகிய ஆகாயத்தில் அருவமாக நிறைந்துள்ள இறைவன் மந்திர ஒலிக்கு வயப்பட்டு அதற்கு அடுத்த சூக்கும நிலையிலுள்ள காற்றில் வந்து முனைக்கின்றான். பின்னர் அதற்கு அடுத்த நிலையிலுள்ள - சிறிது தூலமாகிய அக்கினியில் வந்து இறங்குகிறான். அதன்பின் குடத்தில் நிரப்பப்பட்டுள்ள நீரினுல் புகுகிறான், குடம் உயிர்பெறுகிறது. மந்திர ஆற்றலால் அக்கினியிலும் பார்க்கத் தூலமாகிய நீரில் இறைவன் ஆவேசிக்கிறான். "உருவேறத் திருவேறும்" என்பது பழமொழி. மந்திர ஜபத்தில் அதிகக் கவனம் செலுத்தாமல் ஏனைய ஆரவாரக் கிரியைகளில் கவனம் செலுத்தினால் பயன் குறையும். மந்திர ஜபமே முக்கியம். ஏனைக்கிரியைகளைத் துணையாகவே செய்யவேண்டும்.

கும்பாபிஷேகத்தை நடத்துவதற்குரிய நேரம் வந்ததும் யாகசாலைகளில் உள்ள குடங்களுக்குத் தீப ஒளி காட்டி அவற்றை வலம் வந்து எடுத்துக்கொண்டு கோபுரத்தளத்திற்குச் சென்று முதன்முதல் கோபுரக் கலசத்தின் மீது குடத்திலுள்ள நீரை அபிஷேகம் செய்விக்கின்றோம்.

நீரின்கண் முனைத்து நின்ற இறைவன் மலர் தத்துவமாகிய கலசத்தின் மீது இறங்கித் திருக்கோயில் முழுதும் வியாபிக்கிறான். இதன்பின் ஏனை குடங்களிலுள்ள நீரைக் கோயிலுக்குள் சென்று அங்கே பிரதிட்டை செய்யப்பெற்றுள்ள ஒவ்வொரு மூர்த்தத்திற்கும் அபிஷேகம் செய்விக்கிறோம். இஃதே கும்பாபிஷேகம் எனப்படும். இதனால் கற்சிலையாக இருந்த வடிவங்கள் உடனே மூர்த்தி சாந்நித்தியம் பெற்று வழிபாட்டுக்குரிய தெய்வங்களாகின்றன. கல் என்னும் உணர்வு நீங்கி இறை என்னும் உணர்வு தோன்றுகிறது. நீரை விடக் "கல்" என்னும் மலர் தத்துவம் தூலம், நீரில் முனைத்த இறைவனை அதற்கடுத்த தூலப் பொருளாகிய மண்ணில் முனைக்கச் செய்வதே கும்பாபிஷேகத்தின் இறுதித் தத்துவமாகும். நீர் அபிஷேகம் இதனையே குறிக்கிறது. கும்பாபிஷேகக் கிரியைகள் கட்டிடத்தைக் கோயிலாக்கிக் கல்லைத் தெய்வமாக்கி இம்மை, மறுமை, முத்தி ஆகிய முப்பயன்களையும் நாம் பெறத் துணை செய்கின்றன என அறிதல் வேண்டும். எல்லா மூர்த்திகளும் சாந்நித்தியம் பெறுவதை விடச் சிறந்த மங்கலம் வேறில்லை. இதனாலேயே மங்கல நீராட்டு விழா என இஃது பெயர் பெற்றுள்ளது. நாம் எல்லா மங்கலமும் பெற இம் மங்கல நீராட்டு விழாவே காரணமாக அமைகிறதென்பதும் ஈண்டு நினைவு கூறத்தக்கதாகும்.

கூலிமில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் புதுப்பிக்கப் பெற்று இப்பொழுது மங்கல நீராட்டு விழா நடைபெறுகிறது. யாவரும் எல்லா மங்கலமும் பெற்று இனிது வாழ தண்டபாணியின் திருவருளை வேண்டுகின்றோம்.